முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**29.11.2021,** திங்கட்கிழமை

1. ஆறுமுகனார் மகா சக்தியாக
அறமெனும் பலமாக வந்த
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ தேளின் திங்கள்
குறைவிலா முன்னான்கோர் திகதி சோமவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 13ம் நாள், 29.11.2021 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு கணம்புல்ல நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
ஓங்கார ஞான உலகம் அமைய
ஞான வழி காட்டி அருளுகின்ற
ஞான தேசிகனே கலியின் சிறந்த ஞானி
4. ஞானியரின் சன்மார்க்க நெறி
ஞான உலகம் படைக்கும் நெறி
ஞானியரின் உண்மை நெறி
ஞானிகளை உருவாக்கும் நெறி
5. நெறிதனை உலகமக்கள் ஏற்று
நீதி நெறி பிறழாத் தொடர
நெறிவழி இந்தப் பேருலகம்
நீதி குன்றா நிலை உயர்ந்து
6. உயர்ந்து உலகினில் பாதுகாப்பு
உண்மை குன்றா சமூக வளர்ச்சி
தயவான மக்கள் கூட்டமென
தரணியே தருமபலம் கூடியே
7. கூடியே அரங்க மகானின்
குருமார்க்க வழி காட்டல் வழி
நாடெங்கிலும் அமைதி மகிழ்ச்சி
நற்செயல்களாக சேவைகளாகப் பெருகி
8. பெருகியே இந்தக் கலியுகம்
பேரிடரை கடந்து மாற்றம்
ஆறுமுக ஞானி அருளால்
அறத்தால் ஞானயுகம் ஆகும்
9. ஆகவே மக்களிடை பக்குவமும்
ஆற்றலும் ஆளுமை திடமும்
வகையான ஞான ஆட்சியும்
வழங்கவே வரமாக அருளும்

10. அருளும் ஞானிகள் பூசையும்
ஆற்றல் தரும் சைவ நெறியும்
அருளமுதான அன்னதான சேவையும்
அகிலமெங்கும் ஆளுமை காண

11. காணவே ஞானவான்கள் சக்தி
கூட்டமைப்பு மிகுதியாகி உலகில்
ஞான ஆட்சி உதயம் ஆகும்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–